Kanton Bern
Canton de Berne

**hallo–bern**.ch
**salut–berne**.ch

# தொழில்

வேலைச்சந்தைக்கான நுழைவாயில்
வேலை கண்டுபிடித்தல்
உரிமைகளும் கடமைகளும்
தொழில் இழப்பீட்டு நிலை
பட்டப்படிப்பு அங்கீகாரம்.

# வேலைச்சந்தைக்கான நுழைவாயில்

எந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவர் என்பதிலும் எதற்காக இந்நாட்டிற்குள் வந்தவர் என்பதைப் பொறுத்தும் சுவிஸில் வேலை செய்யவோ சொந்த நிறுவனம் தொடங்கவோ முடியும். எப்படியாயினும் வேலை செய்பவர்கள் சமூகக்காப்புறுதிகளையும் வரிகளையும் செலுத்த வேண்டும்.

## வேலைக்கு அனுமதி

வேலைக்கு அனுமதி பற்றிய கேள்விக்குப் பதில் வதிவிட அனுமதி கிடைக்கும் போதே தெரிந்துவிடும். சாதாரணமாக சுவிஸில் வதிவிட உரிமை பெற்றவர்கள் வேலை செய்யலாம். வழக்கமாக வேலை வழங்குபவர் தான் அனுமதிக்கு விண்ணப்பிப்பார். ஏதாவது சந்தேகங்களிருப்பின் கீழுள்ள ஏதாவது நிலையங்களில் உதவி பெறலாம். இந்த நிலையங்கள் சுவிஸில் இன்னும் குடியிருப்புக்கு வராமல் இங்கு வந்து வேலை செய்ய விரும்புபவர்களுக்கும் ஆலோசனை கொடுக்கும்.அகதி அந்தஸ்துப் பெற்றவர்களுக்கும் (B காட்) அகதி அந்தஸ்து ஏற்கப்பட்டோ அல்லது ஏற்கப்படாமலோ தற்காலிக வதிவிட அனுமதி (F காட்) பெற்றவர்களுக்கும் 2019 தொடக்கம் விசேட அனுமதி தேவையில்லை. ஒவ்வொரு வேலையின் தொடக்கத்திலும் முடிவிலும் உத்தியோகபூர்வ படிவமூலம் மாநிலத்திற்கு அறிவிக்க வேண்டும் (அறிக்கையளிக்கும் கடமை | Meldepflicht | Procédure d'annonce). வேலை செய்யும் இடத்து மாநிலமே இதற்குப் பொறுபாகும். இந்த பதிவு இலவசமானது. அகதி அந்தஸ்துத் தேடுபவர்களுக்கு (N காட்) தொடர்ந்தும் அனுமதிப் பத்திரம் தேவை

## சொந்த நிறுவனம்

சுவிஸில் யாராவது சொந்த நிறுவனம் தொடங்க வேண்டுமாயின் அது அவரது தேசிய இனத்திலும் வதிவிட அனுமதி நிலையிலும்; தங்கியுள்ளது. EU/EFTA - நாட்டவர்களும், நிரந்தர வதிவிட அனுமதி C பெற்றவர்களும் இலகுவாக சொந்த நிறுவனம் தொடங்கலாம். சொந்தமாகத் தொழில் தொடங்குபவர்கள் தமது கிராம சபைகளில் அறிவிக்க வேண்டும். EU / EFTA நாடுகளைத் தவிர மற்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் பொருளாதார விவகாரங்களுக்கான அலுவலகத்தில் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை முன்பே சமர்ப்பிக்க வேண்டும். வேறு நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களும் சொந்த நிறுவனம் தொடங்கலாம் என்பது பற்றி குடிவரவு பிரிவு (Migrationsdienst | Service des migrations) அறியத்தருகிறது. யார் சுயாதீனமாக வேலை செய்ய விரும்புகிறார்களோ, அவர்கள் தமாகவே AHV இழப்பீட்டு நிதி, குடும்ப இழப்பீட்டு நிதி மற்றும் விபத்து காப்பீடு மற்றும் ஓய்வூதிய நிதியுடன் பதிவு செய்ய வேண்டும்.

## அனுமதி பெறாத வேலை

ஊதியம் பெறும் ஒவ்வொரு வேலையும் பொறுப்பான அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். வேலை அனுமதிப்பத்திரமின்றி சமூகக்காப்புறுதிகளுக்குப் பதியாமல் வருமானத்திற்குரிய வரியைக் கட்டாமல் வேலை செய்தால் தண்டணைக்குரிய குற்றமாகும். இதை அனுமதி பெறாத வேலை (Schwarzarbeit) என்பர். அனுமதி பெறாத வேலை செய்தால் சட்டப்படியான பின் விளைவுகளை வேலை வழங்குபவரும் வேலை செய்பவரும் அடையவேண்டியிருக்கும். கூடுதலாக, சட்டவிரோதமாக வேலை செய்யும் எவருக்கும் வேலையின்மை, விபத்து அல்லது இயலாமைக்கு எதிராக காப்பீடு செய்யப்படுவதில்லை மற்றும் ஓய்வூதியமும் இல்லை. வேலைவழங்குபவர் சரியான முறையில் செய்யவில்லையெனக் கருதினால் இலவச சட்ட ஆலோசனை நிலையத்தை (Rechtsberatungsstelle | bureau de conseil juridique ) நாடலாம்.

## இளைஞர்கள்

அடிப்படையில் 15 வயதையடைந்த இளைஞர்கள் வேலை செய்யலாம். இலேசான வேலைகளைக் குறைந்த காலத்திற்கு (உ+மாக விடுமுறை வேலை) செய்வதற்கு அனுமதிக்கப்படும். பெற்றோரும் வேலை வழங்குபவர்களும் இளைஞர்களிற்கு அதிக நெருக்கடி கொடுக்காமல் இருப்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். 18 வயது வரையுள்ள இளைஞர்களுக்குப் பிரத்தியேகத் தொழிற்சட்ட விதிமுறைகளுள்ளன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/work/access-to-the-job-market

# வேலை கண்டுபிடித்தல்

மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சுவிஸில் வேலை இல்லாதவர்கள் குறைவு. இருந்தாலும் கூட வேலை தேடுபவர்களிடம் எதிர்பார்க்கும் தகுதிகளும் அதிகம். தேர்ச்சி அறிக்கைகள் டிப்ளோமா சான்றிதழ்கள் பெரிய அர்த்தம் கொடுக்கும். டொச் அல்லது பிரெஞ்சு மொழி அறிவு அதிகமான எல்லா வேலைகளுக்கும் எதிர்பார்க்கப்படும்.

## தகைமைகள்

தொழில் கற்று முடித்திருத்தல் டிப்ளோமா அல்லது உயர் பயிற்சி பெறல் என்பன சுவிஸிலுள்ள அனைத்து வேலைகளுக்கும் ஒரு உயர்ந்த தகுதியாகக் கொள்ளப்படும். வெளிநாட்டு டிப்ளோமா எப்போதும் அங்கீகரிக்கப்படமாட்டாது. வேலை தேடும்போது முந்தைய வேலை வழங்கியவருடைய வேலைச்சான்றிதழ்; மிகவும் முக்கியம். அதிகமான வேலைகளுக்கு டொச் அல்லது பிரெஞ்சு மொழி அறிவு அவசியம். பேர்ண் மாநிலத்தில் இருமொழிகள் என்பதால், இரு மொழிகளின் அறிவும் சில நேரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

## வேலையிடம் கண்டுபிடித்தல்

வேலை காலியிடங்கள் பற்றி தினசரிப் பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் காணலாம். இணைய இணையதளங்களில் இலவச தேடல் சந்தாக்களை நீங்கள் அடிக்கடி உருவாக்கலாம். அதே நேரம் தனிப்பட்ட வேலைத் தரகர் காரியாலயங்களும் உள்ளன. சுவிஸில் தொலைபேசி மூலம் ஒரு நிறுவனத்திடம் விடுமுறை வேலை காலியாக உள்ளதா என விசாரிப்பது வழக்கமில்லை. அந்த நேரத்திற்கு அந்த நிறுவனத்தில் வேலை காலியிடம் இல்லாமல் இருப்பதும் சாத்தியப்படலாம். பொதுப் பிரதேச தொழில் தரகர் நிலையங்களும் (RAV | ORP) வேலை தேடுவதற்கு உதவிசெய்யும். அங்கே உள்ள கணினி மற்றும் தினசரிப்பத்திரிகைகள் இருப்பதுடன், வேலை தேடுவதற்கு அங்குள்ள பணியாளர்கள் அறிவுரை தருவார்கள்.
நீங்கள் ஒரு வேலையைத் தேடுகிறீர்கள் என்று முடிந்தவரை பலரிடம் சொல்ல வேண்டும். வேலை தேடும்போது தனிப்பட்ட தொடர்புகள் மிகவும் உதவியாக இருக்கும்.

## விண்ணப்பம்

சாதாரணமாக ஒரு வேலைக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும் . விண்ணப்பத்தில் குறைந்தது ஒரு வாழ்க்கைத் தரவு மற்றும் இலட்சியத்தபால் மற்றும் இயலுமாயின் முடிவுத் தேர்ச்சியறிக்கைகள் டிப்ளோமா மற்றும் வேலைச்சான்றிதழ்கள் என்பனவும் அடங்கும். இலட்சியத்தபால் நீங்கள் ஏன் பதவியில் ஆர்வமாக உள்ளீர்கள், ஏன் நீங்கள் அந்த பதவிக்கு சரியான நபர் என்பதை விளக்குகிறது. வேலை வழங்குபவர் விண்ணப்பத்தில் அக்கறைப்பட்டால் ஒரு தனிப்பட்ட அறிமுகப் பேச்சுக்கு அழைக்கலாம் (Vorstellungsgespräch | Entretien d'embauche). அறிமுகப் பேச்சுக்கு நீங்கள் போதுமான அளவு தயார் செய்ய வேண்டியது அவசியம். விண்ணப்பத்தின் போதே அதிக இடங்களில் இதற்கு இலவசமான உதவி வழங்கப்படும்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/work/finding-a-job

# உரிமைகளும் கடமைகளும்

வேலை செய்பவருக்கும் வேலை வழங்குபவருக்கும் பலவிதமான உரிமைகளும் கடமைகளும் உள்ளன. சட்டப்படி ஒழுங்கமைக்கப்பட்டு உதாரணத்திற்கு ஆகக்கூடிய வேலைநேரம், விடுமுறை காப்புறுதிப் பாதுகாப்பு என்பன அடங்கும்.

## தொழில் உடன்படிக்கைப் பத்திரம்

சாதாரணமாக தொழில் உடன்படிக்கைப் பத்திரம் எழுத்தில் தரப்படும். ஆனாலும் வாய் மூலமான உடன்படிக்கையும் செல்லுபடியாகும். இங்கு சட்டப்படியான விதிமுறைகளும் கட்டாய உரிமைகளும் (Obligationenrecht | Droit des obligations) கருத்தில் கொள்ளப்படும். அதற்குள் ஆகக்குறைந்த நியமங்களே இருக்கும். இதன் மூலம் தொழில் உடன்படிக்கைப் பத்திரம் எழுத்தில் இல்லாதவர்களுக்கும் பலவிதமான உரிமைகளும், கடமைகளும் உண்டு.

## வேலை செய்பவர்களின் உரிமைகள்

சுவிஸில் வேலை செய்பவர்களுக்குப் பலவிதமான சட்டப்படியான உரிமைகள் உள்ளன. முக்கியமானவையாக:

- வேலை வழங்குபவர் தன்னிடம் வேலை செய்பவர்களுக்குச் சமூகக் காப்புறுதிகள் செய்திருக்க வேண்டும். அத்துடன் விபத்துக் காப்புறுதியும் செய்து அதில் ஒரு பகுதியைத் தானே கட்டவேண்டும்.
- அனைத்து வேலையாட்களுக்கும் சம்பளத்துடன் கூடிய குறைந்தது 4 கிழமை விடுமுறை கொடுக்க வேண்டும். இது மணித்தியாலச் சம்பள வேலை மற்றும் பகுதி நேர வேலை செய்பவர்களுக்கும் பொருந்தும்.
- ஆகக்கூடிய வேலை நேரம் கிழமைக்கு 50 மணித்தியாலங்கள். சில தொழில்களில் இது 45 மணிநேரம் மட்டுமே, மற்றவற்றில் அதிக வேலை நேரம் அனுமதிக்கப்படுகிறது. ஊழியர்களுக்கு வாரத்திற்கு குறைந்தது ஒரு நாள் விடுமுறை உண்டு.
- வேலை செய்பவர்கள் தமது வேலைச்சான்றிதழைக் கேட்க உரிமையுண்டு.
- எவர் ஒரு நிறுவனத்தில் 3 மாதத்திற்கு மேல் வேலை செய்து பின் நோய் வாய்ப்பட்டாலோ அல்லது விபத்தடைந்தாலோ அவருக்குக் குறிப்பிட்ட காலத்திற்குச் சம்பளம் வழங்கப்படும்.
- கர்ப்பினிப் பெண்களுக்கும் குழந்தை பெற்ற பெண்களுக்கும் பிரத்தியேகமான உரிமைகளுண்டு.

## சம்பளம்

சுவிஸில் சட்டப்படி ஆகக்குறைந்த சம்பளம் என்று இல்லை. அதே சமயம் பல கிளைகள் சேர்ந்து ஒன்றுபட்ட தொழில் உடன்படிக்கைப் பத்திரம் (GAV | CCT) உருவாக்கி அதில் ஆகக்குறைந்த சம்பளத்தை நிர்ணயம் செய்துள்ளனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே வேலைக்கு ஒரே சம்பளமே கொடுக்கப்படும். தொழில் உடன்படிக்கையில் போடப்பட்டிருப்பது மொத்தச்சம்பளமாகும். சமூகக் காப்புறுதிகளைக் (Sozialabzüge | Déductions sociales) கழித்து விட்டு மீதிச் சம்பளமே கொடுக்கப்படும். வதிவிட உரிமை B,F காட் N காட், குறுகிய வதிவிட அனுமதி L எல்லை தாண்டிய அனுமதி G உள்ளவர்களின் சம்பளத்தில் நேரடியாகவே வரிப்பணம் கழிக்கப்படும்.

## பணி நீக்கம்

பணி நீக்கத்தின் போது வேலை வழங்குபவரும் வேலை செய்பவரும் தொழில் உடன்படிக்கையில் உள்ளபடி பணி நீக்கக் காலக்கெடுவைக் கைக்கொள்ளவேண்டும். காலக்கெடுவற்ற பணி நீக்கம் விதி விலக்கான சந்தர்ப்பங்களில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். வேலை செய்பவர் தான் பணி நீக்கம் செய்யப்பட்ட காரணத்தைக் தேவைப்படின் எழுத்து மூலம் கேட்டுப்பெற்றுக்கொள்ளலாம். நோய் வாய்ப்பட்டிருந்தால் விபத்தடைந்திருந்தால் கர்ப்பினியாயிருந்தால் அல்லது குழந்தை பெற்றிருந்தால் விசேடமாகப் ஒரு பணிநீக்கத்திலிருந்து பாதுகாப்புண்டு. தவறாகப் பயன்படுத்தப்பட்ட பணிநீக்கம் பற்றி நீதிமன்றில் புகார் செய்யலாம். வேலை செய்பவர் தானாகவே பணியிலிருந்து நீங்கினால் வேலையற்றோர் காப்புறுதியின் உதவித்தொகையின் அளவில் பாதிப்பை ஏற்படுத்தும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/work/rights-and-duties

# தொழில் இழப்பீட்டு நிலை

சுவிஸில் வதியும் சகல தொழில்புரிவோரும்தொழில் இழப்பீட்டுக்கு எதிராக காப்புறுதிசெய்யப்பட்டுள்ளனர். எவர் தொழிலற்று இருக்கிறார்களோ அவர்கள் குறிப்பிட்ட காலம்வரைபணஉதவி பெறுவார்கள். வேலைஇழந்தோர் பிராந்திய தொழில் தரகர் நிலையத்தில் (RAV|ORP) பதியவேண்டும். இவை வேலைதேடுவதற்கு உதவும்.

## வேலையிழந்தோர் காப்புறுதி

வேலையிழந்தோர் காப்புறுதி (ALV | AC) ஒரு அரசநிறுவனம் மற்றும் அனைவருக்கும் கட்டாயமானது. இதற்கான மாதக்கட்டணம் சம்பளத்திலிருந்து நேரடியாக கழிக்கப்படும், வேலைகொடுப்போர் அரைவாசியை பொறுப்பேற்பர். சொந்தத்தொழில் புரிவோர் வேலையற்றோர் காப்புறுதியில் சேரமுடியாது. எவர் தொழில் இழக்கையில் வேலையற்றோர் இழப்பீட்டுச்செயலகத்திலிருந்து மாதசம்பளத்தின் பகுதியாக கிடைக்கும். (வேலைஇழப்புப்பணம், Arbeitslosengeld, Arbeitslosengeld|allocation chômage) எப்போது, எவ்வளவு வேலைஇழப்புப்பணம் கிடைப்பது வெள;வேறு நிலைகளில் தங்கியுள்ளது. உதாரணமாக எவ்வளவு காலம் வேலை செய்துள்ளார் அல்லது என்ன காரணத்தால் வேலையற்ற நிலைக்கு உள்ளாக்கப்பட்டார் என்பன..

## வேலை இழப்பு நிலை நடைமுறை

அதேசமயம் உடனடியாக பொறுப்பான பிரதேச தொழில் தரகர் நிலையத்திலும் (RAV | ORP) பதியவும். அங்கு தொடர்ந்து செய்யவேண்டிய நடைமுறைகள் வழங்கப்படும்.

## பிரதேச தொழில் தரகர் நிலையம்

பிரதேச தொழில் தரகர் நிலையம் (RAV) விரைவில் ஒரு வேலையை பெறுவதற்கு உதவி செய்யும். ஒருவர் தொழில் இழப்பு பணம் பெறும் ஒருவர் (RAV | ORP) இல் உள்ள ஆலோசனை கலந்துரையாடலில் பங்குபற்றல் கட்டாயமானதாகும். RAV | ORP பயிற்சி வகுப்புகளையும் தொழிற்கல்வி நிகழ்வுகளையும் வழங்குகிறது. இவையும் பகுதிவாரியாக கட்டாயமானவை. சுவிசில் ஒருபோதும் வேலை செய்யாதவரும் தற்போது வேலை தேடுபவரும் RAV | ORP இல் பதியலாம். எனினும் அவர்களுக்கு பணம் கிடைக்காது.

## வேலைவாய்ப்பின்மை நலன்

வேலைவாய்ப்பின்மை நலன் (UB) என்பது பதிவு செய்யப்பட்ட வேலை தேடுபவர்களுக்கான நிதி உதவி ஆகும். RAV பெறலாம் மற்றும் அதற்கு உரிமை உண்டு. தகுதிவாய்ந்த RAV வாடிக்கையாளருக்கு வேலைவாய்ப்பின்மை காப்பீட்டு நிதி மூலம் நேரடியாகப் பணப்பலன் செலுத்தப்படுகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/work/unemployment

# பட்டப்படிப்பு அங்கீகாரம்.

"வெளிநாட்டுப்பபட்டுப்படிப்பு மற்றும் இறுதி அறிக்கை எப்போதும் சுவிசில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த பட்டப்படிப்பு சான்றிதளை அங்கீகரிக்கும்படி கோரலாம். ஒருசில தொழில்களுக்கு இவை நன்கு பிரயோசனப்படும். "

## அங்கீகரிக்கப்படல்

வெளிநாட்டு பட்டம் உள்ளவர்கள் அவற்றை சுவிசில் அங்கீகரிக்கும்படி கோரலாம். இந்த அங்கீகரிப்பின் மூலம் வெளிநாட்டின் பட்டம் அல்லது பயிற்சி முடிவு சுவிசின் பட்டம் அல்லது படிப்பின் முடிவுடன் ஒரே தகமையில் உள்ளதெனப்படும். சில முறைமைப்படுத்தப்பட்ட தொழில்களுக்கு (பராமரிப்புதொழில், ஆசிரியர் போன்றன.) அத்தொழில்களை செய்வதற்கு இவ் அங்கீகாரம் முக்கியம். இவ் அங்கீகாரத்திற்கு அவற்றின் தொழில் மற்றும் பட்டப்படிப்பைப் பொறுத்து வெள;வேறு நிலையங்கள் பெறுப்பானவை. ஓர் அங்கீகரித்தலானது கட்டணத்துக்குட்பட்டது. கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்கான மாநில செயலகம் SBFI வெளிநாட்டு டிப்ளோமாக்களை அங்கீகரிப்பது குறித்த பொதுவான கேள்விகளுக்கு பொறுப்பாகும்.
(Staatssekretariat für Bildung, Forschung und Innovation SBFI | Secrétaire d'État à la formation, à la recherche et à l'innovation SEFRI)

## தரம் உறுதிசெய்தல்

முறைமைப்படுத்தப்படாத தொழில்களை சுவிசில் செய்வதற்கு பட்டப்படிப்பு அல்லது பரீட்சை முடிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டியதில்லை. இந்தத் தொழில்களுககாக ஒரு தரநிலை உறுதிசெய்தலிற்கு (Niveaubestätigung | Attestation de confirmation de niveau) விண்ணப்பிக்க வேண்டும். இது வெளிநாட்டு பட்டப்படிப்பின் பெறுமதியை சுவிசின் பயிற்சித்திட்டத்துடன் ஒப்பிடுகிறது. இவ் உறுதிப்படுத்தல் வேலைதேடுதலிற்கு உதவும். தகவல்களை தேசிய பட்டப்டிப்பு அங்கீகரித்தல் தொடர்பு நிலையத்தில் (Nationale Kontaktstelle für Diplomanerkennung | Point de Contact national pour la reconnaissance de diplômes) அல்லது BIZ தொழில் ஆலோசனை மற்றும் தகவல் மையத்தில் பெறலாம் (Berufsberatungs- und Informationszentren BIZ | Centres d'orientation professionnelle OP).

## தொழிற்பயிற்சி முடிவை மீளச்செய்தல்.

தொழில் அனுபவம் , ஆனால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் அல்லது படிப்பு முடிவு இல்லாதவர்கள் சுவிஸ் அடிப்படைத்தொழிற்கல்வி அல்லது உயர் தொழிற்கல்வியை படித்துமுடிக்கலாம். இந்நடைமுறை அவர் முன்பு செய்திருந்து படிப்பு, தொழில் அனுபவம் மற்றும் வயதில் தங்கியுள்ளது. எதுவாயினும் ஒரு நன்கு டொச் தெரிந்தநிலை (B1/B2 ஜேர்மன் தரம்) மிகமுக்கியமானது. விரும்பியவர்கள் BIZ தொழில் ஆலோசனை மற்றும் தகவல் மையத்தில் (BIZ | OP) இலவச தகவல்களையும் ஆலோசனைகளையும் பெறலாம். எவர் தனது தொழிற்கல்வி பரீட்சையை எடுக்கின்றார்களோ, அவர் தன் தொழில் சந்தையில் மேலதிக சந்தர்ப்பங்களையும், மேற்படிப்புக்கு செல்வதற்கான வழியையும் பெற்றுக்கொள்கிறார்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/work/recognition-of-qualifications